# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 6

- மனிதன் சாவுக்கேதுவானவன்
  கேள்வி-பதில்
- மரணத்திற்குப் பின் வாழ்வு ?
- மோசேக்குள் ஞானஸ்நானம்
- யாவரும் காணும்படி
- வஞ்சிப்பதில் மன்னர்கள்
- பராமரிப்பு அளித்தல்
  ஆறுதலும் மனதுருக்கமும்
  அளித்தல்






மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christesdelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேரான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# மனிதன் சாவுக்கேதுவானவன்

## கேள்வி-பதில்

### 1. மனிதனைப் பற்றி வேதாகமம் வெளிப்படுத்துவது என்ன ?

*பதில் :* **மனிதன் ஆதியில் ஒரு ஜீவாத்துமா அல்லது தேவனுடைய சாயலில் பூமியின் மண்ணிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டவன்.**

***ஆதாரம்***

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7).

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:27).

"நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதியாகமம் 3:19).

"நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்" (சங்கீதம் 103:14).

"இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் (ஆபிரகாம்) ஆண்டவரோடே பேசத் துணிந்தேன்" (ஆதியாகமம் 18:27).

### 2. மனிதன் அழியாமையுள்ளவனா ?

*பதில் :* **இல்லை. அவன் அழிவுக்கேதுவானவன். அவன் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறான்.**

***ஆதாரம்***

"மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்து போகிறான்" (யோபு 14:10).

"மனுஷன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ ?" (யோபு 4:17).

"மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களும் சம்பவிக்கும், அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு. இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே. எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது. எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது"

**3. பூமியிலுள்ள ஒவ்வொரு மதத்திலும் கூறுவது போல, மனிதனின் ஒரு பகுதி மரணத்தின் பின் உயிரோடிருக்குமா?**

*பதில் :* **இல்லை. உண்மையெனப் பல மதங்களால் கருதப்படும். அநேகப் பொய்களில் இந்தக் கோட்பாடும் ஒன்றாகும் மனிதன் முற்றிலும் அழிவுக்கேதுவானவன். தேவன் ஒருவரே சாவாமையுள்ளவர். மனிதன் நாட வேண்டிய ஒன்று சாவாமை. அது வாக்குத்தத்தத்திற்கும் நம்பிக்கைக்குமுரிய காரியம்.**

***ஆதாரம்***

“அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; “நீங்கள் சாகவே சாவதில்லை” என்றது” (ஆதியாகமம் 3:4).

‘‘என் பெலனும் என் கோட்டையும், நெருக்கப்படுகிற நாளில் என் அடைக்கலமுமாகிய கர்த்தாவே, புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உம்மிடத்தில் வந்து, மெய்யாகவே எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையையும் கைப்பற்றினார்கள் என்பார்கள்” (எரேமியா 16:19).

“நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும், மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக” (1. தீமோத்தேயு 1:17).

“சோர்ந்துப் போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்” (ரோமர் 2:7)

“நம்முடைய இரட்சிகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது. அவர் மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமை யையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்க மாக்கினார்” (தீத்து 1:2).

“நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்” (1. யோவான் 2:25).

**4. மனிதனின் சரீரம் அழிவுக்கேதுவானது என்றாலும், மனிதனின் ஜீவன் அழிவில்லாததாய் இருக்காதா?**

***ஆதாரம்***

*பதில்* : **மனிதனின் ஜீவன் அவனிடத்தில் இல்லை. அவன் தேவனுடைய வல்லமையால் மட்டுமே ஜீவிக்கிறான். அவன் மரிக்கையில் அந்த ஜீவன் தேவனிடம் திரும்புகிறது. தேவன் அடியோடு எல்லாவற்றையும் வாரிக்கொண்டால் மனிதன் பிரபஞ்சத்தில் இல்லாமற்போய்விடுவான்.**

“ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது. உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்” (சங்கீதம் 36:9).



“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்றும் தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை.” (அப்போஸ்தலர் 17:25)

“சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது” (யோபு 12:10).

“இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும்.....” (பிரசங்கி 12:7).

‘‘அவர் (தேவன்) தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாகத் திருப்பினாராகில், அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்” (யோபு 34:14).

‘‘நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள். எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்” (ஏசாயா 2:22).

**5. அப்படியென்றால், மரணத்திற்குப்பின் அறிவுடன் கூடிய வாழ்க்கை மனிதனுக்கு இல்லையா?**

*பதில் :* **மரணத்திற்குப்பின் மனிதனுக்கு எவ்வித வாழ்க்கையும் இல்லை. அவன் செத்துப்போனவன் - முற்றிலும் உயிரற்றவன். கொஞ்சக்காலம் அவன் பிறந்திருக்காவிடில் எப்படியோ, அப்படி அவன் மரணத்திற்குப்பின் எதையும் அறியான்.**

***ஆதாரம்***

“உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்” (பிரசங்கி 9:5).

“மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை” (சங்கீதம் 6:5).

“நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே” (பிரசங்கி 9:10).

“அவனுடைய ஆவி பிரியும் அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்” (சங்கீதம் 146:4).

“ஒரு கண்ணும் என்னைக் காணாதபடி, நான் அப்பொழுதே ஜீவித்துப் போனால் நலமாமே. நான் ஒருக்காலும் இல்லாதது போலிருந்து, கர்ப்பத்திலிருந்து பிரேதக்குழிக்குக் கொண்டுபோகப்பட்டிருப்பேன்” (யோபு 10:18,19).

**6. மரணத்தின் போது மனிதனின் ஏதாவது ஒரு பகுதி மோட்சத்திற்குப் போகிறதா?**

*பதில் :* **மரணத்தின் போது மோட்சத்திற்கு அல்லது தேவனிடத்திற்குப் போகிற (மனிதனின்) ஒரேயொரு பகுதி, அவர் நமக்குத் தருகிற ஜீவ சுவாசம் தான். “ஆவி**

(எபிரெயு மொழியில் ருவாக் = சுவாசம்) தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும்" (பிரசங்கி 12:7).

ஆபிரகாம் மோட்சத்திற்குப் போனான் என்று ஆதியாகமத்தில் கூறப்படவில்லை. ''...தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்'' (ஆதியாகமம் 25:8). அவர்கள் எங்கிருந்தார்கள்? அவன் இருந்த இடத்தில் தான் அவர்களும் இருந்தார்கள். அதாவது கல்லறையில்; மோட்சத்தில் அல்ல. ஆதியாகமம் 35:29 ஈசாக்கைப் பற்றியும் ஆதியாகமம் 49:33 யாக்கோபைப் பற்றியும் அதையே தான் சொல்லுகிறது. "என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்'' (சங்கீதம் 71:20) என்று தாவீது கூறினான். தாவீது தான் மோட்சத்துக்குப் போகப் போவதாக நினைத்திருந்தால் அவன் கட்டாயம் இறங்கப்பண்ணுவீர் என்று கூறியிருப்பான். ஏறப்பண்ணுவீர் என்றல்ல!

தானியேல் தீர்க்கதரிசியும், மரணத்தின்போது மக்கள் மோட்சத்திற்குப் போவார்கள் என்று நம்பவில்லை. மக்கள் கல்லறையில் இருப்பதாகத் தான் நம்பினான். "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" (தானியேல் 12:2).

அழியாமையுள்ள ஆத்துமா இருப்பதாகவும் வருகையின் போது எக்காளம் தொனிக்கும் போது ''அழிவுள்ளதாகிய இது அழியாமையைத் தரித்துக்கொள்ளவேண்டும்" (1. கொரிந்தியர் 15:53). எந்த மனுஷனும் மனுஷியும் அழியாமையின் ஒருசிறு பொறியையும் தங்களிடம் உடையவர்களாக இல்லை.

அப்போஸ்தலனாகிய யோவானும் "இரட்சிக்கப்பட்டவர்கள்" மோட்சத்திற்குப் போவதாக நம்பவில்லை. ''என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்'' (யோவான் 6:44). மக்கள் மோட்சத்தில் இருப்பார்களானால் இயேசு ஏன் அவர்களை எழுப்ப வேண்டும்? அவர்கள் மோட்சத்தில் இருப்பார்கள் என்று போதியாமல், கல்லறையில் இருப்பார்கள்; அங்கிருந்து இயேசு எழுப்பப்படுவார்கள் என போதித்தார்.

கர்த்தராகிய இயேசு விட்டுச் சென்ற நம்பிக்கையின் செய்திகளில் ஒன்று : இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளிப்படுத்துதல் 22:12). ஒருவன் மோட்சத்தில் அழியாமையை அனுபவித்துக் கொண்டிருப்பானாகில், இயேசுவின் இரண்டாம் வருகையாலும் சரீர உயிர்த்தெழுதலினாலும் என்ன பயன்? ஆகவே, எளிய சத்தியம் என்னவென்றால், மனிதனின் எந்த ஒரு பகுதியும் மோட்சத்திற்குப் போவதில்லை. கர்த்தராகிய இயேசு லாசருவை அழைத்து உயிரோடெழுப்பியது போல், இயேசுவால் அழைக்கப்படும்வரை மனிதன் கல்லறையில் தூங்குகிறான். லாசரு கல்லறையில் "தூங்கினானே" தவிர மோட்சத்தில் அல்ல (யோவான் 11:11).



# மரணத்திற்குப் பின் வாழ்வு?




நான் அநேக அடக்க ஆராதனைகளுக்குப் போயிருக்கிறேன். அவற்றில், போதகர் துக்கத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதலாக, மரித்தவர்களின் அன்புக்குரியவர் சந்தோஷமும் சமாதானமும் உள்ள ஓர் நிலையில், பொதுவாக மோட்சம் என்று நம்பப்படும் இடத்தில் இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இருப்பினும், அதே போதகர், அந்த ஆராதனையின் பின் பகுதியில் 1. கொரிந்தியரில் பவுல் அப்போஸ்தலன் மரித்தோர் உயிர்த்தெழுதலைப் பற்றிக் கூறியிருப்பதை வாசித்தார். இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரணானவை.

## நாம் அழிவே இல்லாதவர்களா?

மோட்சம் நாம் போய்ச் சேர வேண்டிய இடம் எனும் ஊகம், 'அழிவில்லாத ஆத்துமா' என்றழைக்கப்படும் தெய்வீக, அழியாத் தன்மை கொண்ட ஒரு பகுதி நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது எனும் தறவான கருத்தோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. வேதாகமம் இதை ஆதரித்து எதுவும் கூறவில்லை. ஏனெனில் அப்படி எதையும் அது சொல்வதுமில்லை. ஆரம்ப கிறிஸ்தவ செய்தியில் இக்கருத்து பங்கு பெற வில்லை. அழியாத ஆத்துமாவைப் பற்றி முதன்முதலாக எழுதப்பட்டது. கி.பி. 150க்குப் பின் தான். இந்தப் போதனையின்படி, யாராயிருந்தாலும் சரி, எல்லோருமே மோட்சம் போவோம். நான் வசிக்கும் கார்ன்வாலுக்குப் பக்கத்திலுள்ள கிராமத்தில் உள்ள ஆலயத்தின் நுழைவாயிலில் 'ஜீவனுக்குப் போகும் வாசல் மரணம்' என எழுதப்பட்டிருக்கிறது. ஒரு வாயிலுக்கு முன் அங்ஙனம் எழுதியிருப்பது புத்திசாலித்தனமாகத் தோன்றலாம். ஆனால் அது அப்படி இருக்க முடியாது. ஏனெனில், எவ்வித முயற்சியுமின்றி நித்திய ஜீவன் கிடைத்துவிடும் என்று அர்த்தமாகி விடும்.

இங்கே தான் நாம் வேதாகம போதனையை ஆரம்பிக்கிறோம். நசரேயனாகிய இயேசு அழுத்திக்கூறுவது போல, நித்தியஜீவன் அப்படியே தானாகக் கிடைப்பதில்லை. அதைப் பெறுவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். ஒன்றுமேயில்லாமல் எதுவும் நடக்காது.

தேவன் அன்பான தேவன்தான். வேதம் அப்படித் தான் போதிக்கிறது. நம் புத்திக்கெட்டாதது அவருடைய அன்பு. நான் அந்த அன்பை முற்றிலுமாகச் சார்ந்திருக்கிறேன். ஆனால் அந்த அன்பு ஒரு குறிப்பிட்ட நியதி உடையது. "ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2. பேதுரு 3:9).

தேவனுடைய அன்பை வெளிப்படுத்தும் வசனமும் இதைப் போலொத்த கருத்தைக் கூறுகிறது. ''தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்

படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." கெட்டுப் போதல் என்பது நம்பிக்கையற்ற வார்த்தை - இந்த வசனம் நித்திய ஜீவன் என்பது நிபந்தனைக்குட்பட்டதே தவிர தானாய் சும்மா கிடைப்பதில்லை; ஒன்று நாம் "விசுவாசிக்க வேண்டும்" அல்லது கெட்டு (அழிந்து)ப் போகவேண்டும்.

## ஜீவனின் விருட்சம் கிடையாது

விசுவாசமில்லாவிட்டால் நாமெல்லாருமே கெட்டுபோவோம் அழிந்து போவோம்) - மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை இல்லை. ஏதேன் தோட்டத்தில் மனுக்குலம் அனைத்திற்கும் கொடுக்கப்பட்டத் தீர்ப்பு - மரணதண்டனை. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் உள்ள நன்மை தீமை அறியத் தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கூடாதென்ற தேவனின் கட்டளையைத் துணிகரமாக மீறியதால் வந்தது தான், தேவனுடைய இந்த முடிவு.

"இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான். இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்கு...." (ஆதியாகமம் 3:22).

"அவர்கள் ஏற்கனவே அழியாமையுள்ளவர்களெனில் இந்தத் தடை எதற்கு? என்று என்றாவது உன்னையே நீ கேட்டுக் கொண்டதுண்டா? இதற்கு ஒரே பதில்: அவர்கள் சாவுக்கேதுவானவர்களே தவிர அழியாமை பெற்றவர்களல்ல. நாமும் அப்படிப் பட்டவர்கள் தாம்.

## உறுதியாக்குதல்

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியிலுள்ள விசுவாசிகளுக்கு தேவனைப் பற்றி இப்படி எழுதுகிறார். "தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்" (ரோமர் 2:6,7).



அழியாமையைத் தேடுவதில் நாம் மும்முரமாய் ஈடுபடாவிடில், இந்த வார்த்தைகளை நாம் எவ்விதம் விளங்கிக் கொள்ள முடியும்? திட்டமாகவே நமக்குள்ளே அழியாமை உறைந்திருக்கவில்லை. ஆதாம் கொண்டு வந்த தீமையைக் களைவது கர்த்தராகிய இயேசுவின் வேலையாயிற்று. ஆகவே "அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாயமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" (2. தீமோத்தேயு 1:10).

இயேசு இல்லை எனில் - நற்செய்தியும் இல்லை. தொடர்ந்து அழியாமையைக்



குறித்த நம்பிக்கையுமில்லை. நாம் தப்பிக்க முடியாத சத்தியம் என்னவெனில், எப்பொழுதெல்லாம் அப்போஸ்தலர்கள் நித்தியஜீவன் அல்லது அழியாமையைப் பற்றிப் பேசினார்களோ, அப்பொழுது சரீர உயிர்த்தெழுதலைப் பற்றித் தான் நினைத்தார்கள். இதுவே அவர்கள் செய்தியின் உயிர் நாடியாகும். "நமக்கு ஒரு நித்தியமான ஆத்துமா உண்டு. அது மோட்சம் அல்லது நரகத்திற்குப் போகும்" என்ற பொய்யான கருத்தானது தமது உயிரித்தெழுதலின் மூலமாகக் கிறிஸ்து செய்திருந்த எல்லாவற்றையும் அழிக்கிறதாக உள்ளது.

கிறிஸ்தவ செய்தி மற்றும் நம்பிக்கை முழுவதும் இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலினால் வலிமை பெறுகிறது. அவரது கல்லறை காலியாக இல்லையென்றால், கிறிஸ்து சொன்னதும் செய்ததும் ஒன்றுமில்லையென்றாகும். மக்களை நித்திய மரணத்தினின்று ரட்சிக்க வல்லவர் என்பதும் இல்லையென்றாகும். ஆனால் கல்லறை காலியாக இருந்தது, ஏனென்றால் இயேசு கிறிஸ்து உயிரோடெழுந்தார்!

## சரர உயிர்த்தெழுதல்

கல்லறைத் தோட்டத்தில் சவ அடக்கத்திலிருந்து வாசிக்கப்படும் 1. கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில், இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மிக முக்கியமானதும் ஆதாரமானதாயும் இருக்கிறதென்பதைப் பவுல் மிகத் தெளிவாகக் கூறியுள்ளான். 'மோட்சத்தில் அறிவுணர்வுடன் இருப்போம்' என்ற யூகம் இந்த அதிகாரத்தில் காணும் விளக்கத்திற்கு முரணானதாய் இருக்கிறது. பவுல் இவ்விதம் எழுதுகிறான் :

"மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை யென்றால் எங்கள் பிரசங்கம் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா" (1. கொரிந்தியர் 15:13,14).

தன் விசுவாசத்தை மேலும் தொடர்கிறான் :

"மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்" (15:16-19).

இது ஒரு குறிப்பிடத்தக்க முக்கியமான பகுதி : உயிர்த்தெழுதல் இல்லையெனில் கிறிஸ்து இன்னும் மரித்தவராகவே இருப்பார். கிறிஸ்தவ விசுவாசமும் வீணாயிருக்கும். - நாம் இன்னும் நம் பாவத்தில் தான் இருக்கிறோம். அவருடைய உயிர்த்தெழுதல் தான் விசுவாசிக்கும் பாவிகளை ரட்சிக்கும். அவருடைய ரத்தத்தின் தகுதியை மெய்ப்பிக்கிறது. நாமெல்லாரும் கொள்ள வேண்டிய கிறிஸ்தவ நம்பிக்கையைப் பவுல் இவ்விதமாகக் கூறுகிறான்.

''கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்." (15:20)

இரட்சிப்பு இப்படி உனக்கு மெய்யாக அருளப்படுவதை விட்டுவிடாதே. பற்றிக்கொள்!

**- நைஜல் பற்றர்ஸன்**

# மோசேக்குள் ஞானஸ்நானம்

***"நீங்கள் நின்று, கர்த்தருடைய இரட்சிப்பைப் பாருங்கள்"***

பின்பு யாஹ்வே கர்த்தர் இஸ்ரவேல் மக்களிடம், "நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களை என்னண்டையிலே சேர்த்துக் கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள்" (யாத்திராகமம் 19:4) என்று கூறினார். இந்த வேளையில் கர்த்தர் தமது ஜனங்களுக்காகச் செய்த ஆச்சரியமான அற்புதங்களும், தொடர்ந்து அவர்களை விடுவித்து தற்காத்து வந்ததுமான சம்பவங்களும் பிற்காலத்தில் அவர்களிடம் ஞாபகமூட்டவும், தாங்கள் ஒரு ஜனமாக கருதப்படுவதற்குக் கர்த்தரே காரணமானதால் அவருக்கு நன்றியறியதலுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதை அறிவிக்கவும் செய்தார். அவையனைத்திலும் மிகவும் அற்புதமும் ஆச்சரியமுமான சம்பவம் என்னவெனில், கர்த்தர் செங்கடலைப் பிளந்து, அதன் வழியாக இஸ்ரவேலரைப் பாதுகாத்து, அவர்களை விரட்டி வந்த எகிப்தியரை அங்கேயே தண்ணீரில் மூழ்கி சாகவும் செய்தார்.

இந்தப் பாடத்தின் நோக்கம் என்னவெனில், எவ்வாறு கர்த்தர் தமது ராஜ்யத்தின் ஜனங்களைத் தம்மிடம் கூட்டிச் சேர்த்தார் என்று காட்டுவது ஆகும்

### யாத்திராகமம் 13-15

### எகிப்திலிருந்து புறப்புடுதல் (யத்திராகமம் 13:17-14:12)

யாத்திராகமம் 13:17-22 எபிரெயர் எகிப்திலிருந்து வெளியேறும் மார்க்கத்தைக் கர்த்தர் தெரிந்தெடுத்து அவர்களை வழி நடத்தி வந்தார் என்று கற்றுகொள்ளுகிறோம். அவர்களுடைய அணிவகுப்பின் முன்னணியில் மோசேயும் ஆரோனும் இருந்தார்கள். (சங்கீதம் 77:20). அவர்களை வழிநடத்த அவர்களுக்கு முன்னால் மேகஸ்தம்பம் சென்றது. அது இரவில் அக்கினிஸ்தம்பமாக மாறினது. அது தேவனுடைய தூதனாக கர்த்தருடைய பிரசன்னத்தின் அடையாளமாக அவர்களுடன் சென்றது (நெகேமியா 9:19).

அவர்கள் நேர்வழியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்கவில்லை. ஏனெனில் தமது ஜனங்களைக் குறித்த ஒரு திட்டத்தைக் கர்த்தர் வைத்திருந்தார். அவர்கள் கர்த்தருடைய வழிகளில் உபதேசிக்கப்படவும் அவர் விருப்பத்துக்கு ஏற்றவர்களாக நடக்கவும் பயிற்சி பெறவேண்டியதாயிற்று. அதை வனாந்தரம் பெற்றிருந்ததினால் அவர்களுக்குக் கட்டுப்பாடு, ஒழுங்கு, யுத்தம் பண்ணும் திறமை அவசியமாக இருந்தது. ஆனால், கர்த்தர் அவர்களைப் பத்திரமாகச் சத்துருக்களின் தாக்குதலுக்கு விலக்கி வழிநடத்தினார் (யாத்திராகமம் 13:17-18).





அவர்களை முதலாவது சுக்கோத்துக்கு அழைத்து வந்து, அங்கு இளைப்பாறச் செய்தார். (13:20; 12:37-39). பெண்கள் புளிப்பில்லாத அப்பம் சுட்டனர். ஆண்கள் தங்கள் குடும்பம் தங்கும்படி நிழலாக மரக்கிளைகளை வெட்டினர். சுக்கோத் என்றால் "கூடாரங்கள்" என்று பொருள். இந்த சந்தோஷமான சம்பவம் தான் பிந்திய நாட்களில் கூடாரப் பண்டிகையாக ஆசரிக்கப்பட்டு வந்தது (லேவியராகமம் 23:39-43).

பின்பு அவர்கள் ஏத்தாமுக்கு வந்தார்கள் (யாத்திராகமம் 13:20). அதன் அர்த்தம் "ஓரம்" என்பது. ஏனெனில் அது வனாந்திரத்தின் ஓரத்தில் எகிப்தின் எல்லையிலும் இருந்தது. முதல்முதலாக வனாந்திரத்தின் கோரத்தன்மையை அவர்கள் கடக்க வேண்டியதாக இருந்தது. கர்த்தர் முதலில் சத்தியத்தை அறிகிறவனுக்கும் கிடைக்கும் மகிழ்ச்சியைக் காண்பிப்பது போல, அவர்கள் ஞானஸ்நானத்தின் அனுபவத்துக்குள் கடந்து வரும்வரை அவர்கள் கடந்து வரவேண்டிய துன்பத்தை இப்போது காண்பித்தார் (1. கொரிந்தியர் 10:1-2).

இஸ்ரவேலர் தங்கள் பயணத்தை ஏத்தாமிலிருந்து சிவந்த சமுத்திரத்தைக் கடக்காமலே அதன் கிழக்குப் பகுதி வழியாகத் தொடர்ந்திருக்கலாம். ஆனால் மேகஸ்தம்பம் அவர்களை சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேற்கு முகமாக வழி நடத்தினது. அது அவர்களை ஈரோத்துக்குக் கொண்டுவந்தது. (14:2)

அங்கு அவர்கள் கரடுமுரடான வெரும் பாறைகளைக் கடந்தார்கள். வலிமையும் உயரமுமான பாறைகளான மலைப்பகுதிகளின் நடுவே செங்குத்தான பள்ளத்தாக்குகள் கடல் மட்டும் ஓடையைப்போல நீண்டு சென்றன. இப்படிப்பட்ட ஒரு ஆழமான பள்ளத்தாக்கில் இஸ்ரவேலின் புத்திரர் பயணஞ் செய்தார்கள். இவ்வாறு நடந்து செங்கடலுக்கு நேர் எதிரில் வந்து நின்றார்கள்.

### பார்வோன் இஸ்ரவேலரைத் துரத்தினான் (யாத்திராகமம் 14:5-14)

இந்த செய்தி பார்வோனின் காதுகளில் போய் எட்டியது. இதில் இஸ்ரவேலரின் தலைவன் ஒரு பெரிய தப்பு பண்ணி விட்டதாகத் தெரிந்தது. "அவர்கள் நமது தேசத்துக்குள்ளேயே அகப்பட்டுக் கொண்டார்கள். வனாந்தரம் அவர்களை அடைத்துப் போட்டது" என்று அவன் அகமகிழ்ந்தான். தனது குதிரைகள் பூட்டிய ரதங்களை ஆயத்தப் படுத்தி, தாங்கள் வெறுத்த எபிரெயரை அழிக்கும்படி பின்தொடர்ந்தான். அதனால் இஸ்ரவேலர் ஒரு மோசமான முடிவெடுத்தனர். இரண்டு பக்கத்திலும் மலைகள் சூழ்ந்திருக்க, முன்னால் கடல் இருக்க, பார்வோனின் ரதங்கள் அவர்களை நோக்கிப் பாய்ந்து வருகிறதை கண்டார்கள். அவர்கள் கர்த்தருடைய இரக்கத்தையும் அவருடைய ஆச்சரியமான கிரியைகளையும் மறந்தார்கள். அவர்கள் கோபத்துடன் மோசேயிடம் "வனாந்திரத்தில் சாகவா நீர் எங்களை எகிப்திலிருந்து இங்கு கொண்டு வந்தீர்?" என்று கேட்டார்கள் (வச. 10-12). அதற்குப் பதிலாக அவர்களுடைய அற்புதமான தலைவன் கூறினதை 13-14ம் வசனங்களில் வாசிக்கலாம். "பயப்படாதிருங்கள், நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்." அவர்கள் அன்று கண்ட எகிப்தியரை இனி காணப்போவதில்லை. மோசே உதவிக்காக கர்த்தரிடம் திரும்பினான். அவன் கோலை உயர்த்தி சமுத்திரத்துக்கு நேராக நீட்டி, இஸ்ரவேலர் உலர்ந்த பூமியில் கடந்து போகத் தக்கதாக அதை பிளக்கும்படிக் கட்டளையிட்டார். (வச. 15-16)

## செங்கடலைக் கடந்து செல்லுதல் (யாத்திராகமம் 14:15-16)

அதற்குள் கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் நடுவே கடந்துப் போனார். மேகஸ்தம்பம் எகிப்தியருக்கு இருளையும் இஸ்ரவேலருக்கு வெளிச்சத்தையும் கொடுத்தது. மோசே தனது கோலை உயர்த்தி கடலுக்கு நேராக நீட்டினான். கர்த்தர் கீழ்காற்றை இரவு முழுவதும் வீசப்பண்ணினதால் சமுத்திரம் இரண்டாகப் பிளந்து, நடுவிலுள்ள பாதை உலர்ந்து போயிற்று. இரண்டு பக்கத்திலும் கடல் நீர் உயர்ந்த மதில்கள் போல் “உறைந்து” திரண்டு நின்றது (14:22; 15:8; சங்கீதம் 78:13) இந்தப் பாதையினூடே இஸ்ரவேலர் பத்திரமாகக் கடந்து சென்றனர். ஆனால் எகிப்தியர் அவர்களைப் பின் தொடர முயற்சிக்கும் போது கடலில் மூழ்கினார்கள். (சங்கீதம் 78:53)

கர்த்தர் எகிப்தியரின் இருதயங்களைக் கடினப்படுத்தியதால், அவர்கள் மதியீனரைப்போல இஸ்ரவேலரை விரட்டி அவர்களை மறுபடியும் அடிமைகளாகப் பிடிக்க முயற்சித்தனர் (வச 12). ஆனால் அவர்களுடைய ரதங்களின் சக்கரங்கள் அற்புதமாகக் கழன்று விழ ஆரம்பித்தன. அதனால் அவர்கள் பீதியடைந்து இருபுறமும் குவிந்து நின்ற கடலுக்கு அஞ்சி தப்பி ஓட முயன்றனர் (வச. 28). ஆனால் அது பிந்திப் போயிற்று. கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து, மோசே தனது கோலை மறுபடியும் நீட்டினான். சமுத்திரம் புரண்டு வந்தது. பார்வோனின் சேனை முழுவதும் அங்கே மடிந்தார்கள் (14:23-29). செங்கடலினூடே இஸ்ரவேலர் கடந்து சென்றது ஒரு மாபெரும் விசுவாச கிரியையாக இருந்தது (எபிரெயர் 11:29). செங்கடலின் கிழக்குப் பகுதியில் இஸ்ரவேலர் பத்திரமாக கூடி சேர்ந்திருந்தனர். அவர்களுக்கு நேரிட்டிருக்கக் கூடிய பெரிய ஆபத்திலிருந்து அவர்கள் விடுவிக்கப் பட்டார்கள். அவர்கள் கண்ட மாபெரும் காட்சி ஆச்சரியமானது. மோசேக்கு எதிராக முறுமுறுத்தவர்கள் இப்போது அவனுக்கு முன்பாகப் பணிந்து மன்னிப்பு கேட்க முயன்றனர். எல்லாருடைய மனதிலும் கர்த்தர் மெய்யாகவே இரட்சிக்கக்கூடிய வல்லமையுள்ளவர் என்று உணர்ந்திருந்தனர். “அதனால் ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்” (14:31).



அந்த ஆச்சரியமான சம்பவத்தைக் கொண்டாடி ஒரு துதி பாடலை மோசே எழுதி பாடினான். ஜனங்களும் பாடினார்கள் (15:1-19). மிரியாமும் இஸ்ரவேலரின் பெண்களும் கூடி இசைக்கருவிகளை வாசித்து பிரதிவசனமாகப் பாடினார்கள். ‘‘யாஹ்வே கர்த்தரைப் பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரைகளையும் குதிரை வீரர்களையும் கடலிலே தள்ளினார்’’ (15:20-21). இஸ்ரவேலரின்



நடுவில் சம்பவித்த சடிதியான மாற்றங்களையும் நாம் உற்றுப் பார்த்தல் அவசியம். முதலில் அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறினதற்காக மகிழ்ந்தனர். ஆனால் எதிர்மாறான சூழ்நிலைகள் வரும்போது அவர்கள் மனம்சோர்ந்துபோய் மோசேக்கு எதிராகப் பேசினார்கள். பின்பு திரும்பவும் விடுதலை கிடைத்தப்பின் கவலைகள் வெற்றியாக மாறினதைக் கண்டபோது, செங்கடலின் ஜெயத்தைக் கொண்டாடிப் பாடினார்கள். மனித எண்ணங்கள் நிலையற்ற பலவீனமானவை. ஆனால் கர்த்தர் நிலையாக உண்மையுள்ளவராகவும் மாறாமலும் இருக்கிறார். செங்கடலின் விடுதலை அனுபவம் கர்த்தருடைய பெரிதான பாதுகாப்பின் அடையாளமாக இருந்ததுடன் பிற்கால சந்ததியாரால் நன்றியுடன் நினைவுகூறப்பட்டது. (சங்கீதம் 106:9-11). மற்ற வேளைகளில் கர்த்தர் அதை அவர்களுக்கு ஞாபகமூட்டினார். (ஆமோஸ் 2:10; 3:1).

## ஒரு புதிய ஜீவன்

இப்பொழுது இஸ்ரவேலர் ஒரு புதிய ஜீவியத்தை ஆரம்பிக்கிற சுதந்தரமான ஜனமாக இருந்தனர். அடிமைத்தனம், கொடுமையாக வேலை வாங்குகிறவர்கள் மற்றும் எகிப்தின் விக்கிரகாராதனை அவர்களுக்குப் புறம்பே ஆனது. அவர்கள் இப்போது தங்களை ஆண்டு வழிநடத்துகிற கர்த்தரைப் பின்தொடருகின்றனர். இவையெல்லாவற்றிலும் ஒரு அற்புதமான பாடம் நமக்கு உண்டு. பவுல் 1. கொரிந்தியர் நிருபித்தில், இஸ்ரவேலர் செங்கடலைக் கடக்கும்போது, **மோசேக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள்** என்று காட்டுகிறான். அவர்கள் தண்ணீரில் “அடக்கம்” செய்யப்பட்டு, மேகத்தினாலும் கடலினாலும் சூழ மூடப்பட்டிருந்தார்கள். அவர்கள் கடலின் மறுகரை சேர்ந்தபோது புதுவாழ்வுக்கென்று உயிர்த்தெழுந்தார்கள்.

இவைகளெல்லாம் நமக்கு உதாரணமாகவும் முன் எச்சரிக்கையாகவும் நடந்தன என்று அப்போஸ்தலன் எழுதுகிறான் (வச.6). நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் அடையாளமாக. அது இருக்கிறது. ஒரு விசுவாசி ஞானஸ்நானத்துக்கென்று தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, அவன் தனது பழைய ஜீவியத்தை விட்டுவிடுகிறான். அவனுடைய பழைய மனுஷனாகிய மாம்ச இச்சை எகிப்தியர் அழிந்ததுபோல அழிக்கப்பட்டுவிட்டது (ரோமர் 6:6). கிறிஸ்துவில் அவன் கர்த்தரை தனது வழிகாட்டியாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும்முன், தனது மாம்ச இச்சைகளுக்கு அடிமையாக அதன் ஆளுகைக்கு அடங்கி, அதன் ஆசைகளைத் தேடி ஜீவித்தான். ஆனால் இப்போது அப்படியல்ல (ரோமர் 6:16-18; மத்தேயு 6:24 ஒப்பிடுக).

முதலாவது, இஸ்ரவேலர் மரணத்தைச் சந்திக்கப் போகிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு வந்தது. இரண்டாவதாக, அவர்கள் தங்களை மீட்க வல்ல பஸ்கா ஆட்டுக்குட்டியை விசுவாசித்தார்கள். மூன்றாவதாக, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் சிக்கலான சூழ்நிலையில் இருந்தார்கள். இல்லாவிட்டால் அவர்கள் மரிப்பது நிச்சயம். சத்தியத்துக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களில் கர்த்தர் கட்டளையிடும் அனைத்திற்கும் நாம் கீழ்ப்படிவது அத்தியாவசியமாகும். அவருடைய சித்தத்தை அறிகிற அறிவுக்கு வந்தப்பின், நாம் அதற்கேற்றபடி நடக்க வேண்டும். (லூக்கா 12:47; யாக்கோபு 4:17; யோவான் 12:48; 9:41; 15:22).

1. பஸ்கா இரவில் எகிப்தின் தலையீற்றுக்கள் அதம் பண்ணப்பட்ட பின்பு, மோசே இஸ்ரவேல் புத்திரரை ராமசெஸ்ஸிலிருந்து சுக்கோத்துக்கு வழிநடத்தினான். (12:31-39).
2. சுக்கோத்திலிருந்து அவர்கள் மேகஸ்தம்பத்தினால் நடத்தப்பட்டு வனாந்தரத்தின் ஓரத்திலுள்ள ஏத்தாமுக்கு வந்தார்கள். (13:20-22)
3. ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தின் மேற்கு புறமாக நடத்தப்பட்டனர். பார்வோன் அவர்களைத் துரத்த, தமது ஜனங்களைக் கர்த்தருடைய பெரிதான வல்லமையைக் காணும்படி செய்து, செங்கடலைக் கடக்கும்படி செய்தார். (14:1-31)
4. இரண்டு நாட்களுக்குப் பின் அவர்கள் மாராவுக்கு வந்தார்கள். அங்கு கசப்பான தண்ணீர் அற்புதமான நல்ல தண்ணீராக மாறியது. (15:22-25)
5. இஸ்ரவேலர் ஏலீமில் தங்கினர். அங்கு 12 கிணறுகளும் 70 பேரீச்ச மரங்களும் இருந்தன. (15:27)
6. ஜனங்கள் முறுமுறுத்து, மன்னா மற்றும் காடைகளைக் கொண்டு போஷிக்கப் பட்டார்கள். (16:1-36)
7. மறுபடியும் முறுமுறுத்தப்பின் ரெவிதீமில் கற்பாறையிலிருந்து மோசேயினால் தண்ணீர் கொடுத்தார். (17:17)
8. மோசேயின் கரங்கள் ஆரோனும் ஊரும் சேர்ந்து உயர்த்திப் பிடிக்க அமலேக்கியர் முறியடிக்கப்பட்டார்கள். (17:8-16)
9. சீனாய் மலையில் மோசேயின் மூலமாக அவர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது (19:1-6)

## நமக்குப் பாடங்கள்

F கர்த்தர் இஸ்வேலரை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வரும்போது, நேராக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு அவர்களை அழைத்துச் செல்லவில்லை. ஆனால் படிப்படியாக, வனாந்திரத்தின் கஷ்டங்களைக் கடந்து செல்லும்படி அவர்களை வழிநடத்தினார். அதை போலவே நாமும் கட்டுப்பாட்டுக்கும் இஷ்டங்களுக்கும் அனுமதிக்கப்பட்டு, குணசீலத்தில் நன்றாக வளர்ந்து, அதன்பின் பரிசைப் பெறுகிறோம்.

F இஸ்ரவேலரைப்போல, வனாந்திரத்துக்கு அழைத்துச் சென்றாலும், கர்த்தருடைய பாதுகாக்கும் கரங்களின் அரவணைப்பில் நாம் இருக்கிறோம். அவர் நம்மை அழிக்கிறவர்களிடமிருந்து பாதுகாத்து இரட்சிக்கிறார்.

F வலது புறத்திலும் இடது புறத்திலும் மலைகள் உயர்ந்துநிற்க, எதிரில் சமுத்திரமும், நம்மை அழிக்கப் பின்தொடரும் சத்துருவும், சூழ்ந்திருக்கையில், தேவனைத்தவிர வேறுயாருமே நமது ஆதாரமாக இருக்கமுடியாது என்பதை இஸ்ரவேலருக்கு (நமக்கும்) போதித்தார். எனவே மனிதர் "நின்றுகொண்டு" கர்த்தர் செய்யும் பெரிய இரட்சிப்பைக் காணும்படி காத்திருக்க வேண்டும்.

F மரணத்தின் போராட்டம் எதிர்க்கையில், இஸ்ரவேலர் செங்கடலினூடே நடந்து, இவ்விதமாக **"மோசேக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள்"** (1. கொரிந்தியர் 10:2). நாமும் ஒரு முறை சத்தியத்தை அறிந்தப்பின் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகும்.



# யாவரும் காணும்படி




மாறி மாறி வரும் பருவ காலங்களும் இயற்கையின் மீது அவற்றின் தாக்கங்களும் கண்களைக் கவரும் அழகினைத் தருகின்றன. ஆண்டின் இந்த சமயத்தில் மரங்களின் அமைப்பைக் காணும் வாய்ப்பு நமக்குக் கிட்டியுள்ளது. கோடைக் காலம் முழுவதும் இலைகளால் மூடப்பட்டது போல் உள்ள மரங்கள் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றின. நானும் என் நாய்களும் காட்டினூடே நடந்து செல்லும் இந்நேரத்தில், மரங்களின் வடிவங்களும் தன்மையும் வெளிப்படையாகத் தெரிகின்றன. ஒவ்வொரு மரமும் வெவ்வேறு கதை சொல்லும். இப்பொழுது அவற்றின் உண்மை நிலை எல்லாருக்கும் வெளியரங்கமாயுள்ளது. அந்த மரத்தின் ஒரு கிளை போன புயலில் ஒடிந்து கிடக்கிறது. அதோ, அந்த மரம் நடுவில் இரண்டாகப் பிளந்து நடுவில் அசிங்கமாக இருக்கிறது. அந்தப் பக்கத்தில் இருக்கும் மரம் எச்சேதமுமின்றி நன்றாகப் பலமாக இருக்கிறது. பலமற்ற கிளைகள் மற்றும் கரடு முரடான வடுக்கள் கொண்ட மரங்களையும், ஆரோக்கியமான, ஓங்கி வளரும் கிளைகள் கொண்ட மரங்களையும் காண்கிறேன்.

நாமும் கூட ஒர் நாளில், நம் குணத்தை மறைக்க எதுவுமின்றி வெளியரங்கமாக்கப்பட்டவர்களாக நிற்போம். பகட்டான ஆடைகளால், போலி மனப்பான்மைகள் அல்லது நம்மைச் சுற்றியுள்ள உலகுக்கு முன் நாம் தினசரி போட்டுக் கொள்ளும் முகமூடிகள் ஆகியவற்றின் பின்னால் நம்மை மறைத்துக் கொள்ள முடியாது. நாம் நாமாகவே, நம் உள்ளான மனிதன் வெளியரங்க மாக்கப்பட்டு நம் நீதிபதியின் முன் நிற்போம்.

நாம் நமது வெளிப்போர்வையின் கீழ் நோக்கிப் பார்த்து, அடியில் கிடக்கும் அவலங்களைப் பட்டியலிட்டு, நியாயாசனத்தின் முன் அவை வெளியரங்கமாகுமுன், இயன்றவரை நம்மைத் திருத்திக் கொள்வோம்.

*''சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்"* (எபிரெயர் 4:13).

தரித்து நின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை தியானித்துப் பாரும் (யோபு 37:14).

# வஞ்சிப்பதில் மன்னர்கள்



தான் ஒரு விஷம் மிக்க பாம்பைப் போலத் தோற்றமளித்தால், தன்னை இரையாகத் தேடிவரும் பகை விலங்கு மற்றும் பறவைகளைப் பயப்படுத்தி விரட்டலாம் என்ற எண்ணம் ஒரு அப்பாவி கம்பளிப்புழுவிற்கு எப்படித் தோன்றியது? நாலு அங்குல புழு அந்த அளவிற்கு உண்மையிலேயே அறிவுப்படைத்ததா?

படத்தில் விஷப் பாம்பு போல் தோற்றமளிக்கும் கம்பளிப்புழு, காற்றை உள்ளே உறிஞ்சி, தன் உடலின் முன் பாகத்தைக் காற்றால் நிரப்பிக் கொள்கிறது. இச்செயல் முக்கோண வடிவமுள்ள 'தலை'யை உண்டாக்குகிறது. அங்குள்ள நிறமும், குறிகளும் அசல் பாம்பின் தலை போன்ற தோற்றமளிக்கக் காரணமாகின்றன. ஆபத்து மறைந்ததும், அமேசான் நதிக்காடுகளில் காணப்படும் இக்கம்பளிப்புழு, காற்றை வெளிவிட்டுப் பழைய நிலையை அடைந்து, நாளடைவில் அந்திப் பூச்சியாக மாறுகிறது.

கம்பளிப்புழு ஒன்றும் இந்தத் தந்திரத்தை யோசிக்கவில்லை. கோடிக்கோடி ஆண்டுகளானாலும் அப்படி அவைகளால் சிந்திக்க முடியாது. கம்பளிப் புழுவையும் மரத்தில் வாழும் பாம்பையும் வடிவமைத்துப் படைத்தவர் தம் ஞானத்தினால் இவைகளைப் படைத்தார்.

"கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது. அவைகளெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர், பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது" (சங்கீதம் 104:24).

படைப்பின் விந்தைச் செயல்கள் பூச்சியினங்களில் காணப்படுகின்றன. தங்கள் பகைவரிடமிருந்து தப்பிக்க நிறமாற்றம் செய்து ஏமாற்றுகின்றன. கீழே படத்தில் காணும் பூச்சி, குச்சிப்பூச்சி இனத்தைச் சேர்ந்ததெனினும் அதன் வடிவம், தன்மை மற்றும் நிறம் இலையைப் போன்றே இருக்கின்றன. ஒன்றைப் படைத்தார். அதைப்போல எல்லாவற்றிலும் அவைகளைப் படைத்த தேவனின் கைவண்ணம் தெளிவாகத் தெரிகிறது.





# பராமரிப்பு அளித்தல் ஆறுதலும் மனதுருக்கமும் அளித்தல்

**(சிந்தனை)**

சில வருடங்களுக்கு முன் நான் ஒரு சகோதரியைச் சந்தித்தேன். அவர்கள் கணவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தார். தன் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கொட்டித் தீர்த்துப்பேச தனக்கு யாருமே இல்லை என்ற அந்த சகோதரி "அல்லது நான் நன்றாக அழுது தீர்க்கும் மட்டும் என் பக்கத்தில் சும்மா உட்கார்ந்திருந்தாலே போதும்", என்றார்கள்.



சமீபத்தில் இன்னொரு சகோதரியும் இதே போன்ற அனுபவத்தை உடையவர்களாயிருந்தார்கள். இந்த சகோதரிகளுக்குச் சொல்லப்பட்டது என்ன? "வேதம் வாசித்து ஜெபம் செய்யுங்கள்; எல்லாம் சரியாகி விடும்". "நேர்மையைக் கண்டு பிடித்து சுகமாக்கும் திட்டத்திற்குப் போவதற்கு உங்களுக்குப் போதுமான காலம் இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டு, உங்கள் வாழ்க்கையில் முன்னேறிச் செல்லுங்கள்".

இதன்படி செய்வது கடினம். நீ நேசிக்கிற ஒருவருக்கு பயங்கரமான ஒன்று நிகழ்ந்துவிட்டால், நீ எப்படி வைத்தியர் கண்டு பிடித்ததை ஏற்றுக்கொண்டு, உன் வாழ்க்கையில் தொடர்ந்து செல்வாய்? அவர்களோடு 40 அல்லது 50 ஆண்டுகள் செலவழித்தாலும் அல்லது சில மாதங்களே ஆகியிருந்தாலும் உள் உணர்வு எப்படி இருந்திருக்கும்?

இந்த சகோதரிகளுக்குச் சொல்லப்பட்டவைகளுக்கு ஓர் இடமுண்டு. அவைகளெல்லாம் உண்மையே. தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் பற்றிய அறிவைப் பெற வேதத்தை வாசிப்பது முக்கியம். வேத வசனங்களில் நாம் ஆறுதலைக் கண்டடைகிறோம். நமக்கு "அதிகமாய் ஆறுதல் அளிக்கக் கூடிய ஒருவரிடம் நம் எண்ணங்களைத் தெரிவிப்பதில் ஜெபம் நமக்கு உதவுகிறது. ஆம், நாம் கடைசியில் நிஜத்தை சந்தித்தாக வேண்டும். ஆரம்பத்தில் அது கஷ்டம். மரணத்துக்கேதுவான

நோய் என நம் அன்புக்குரிய ஒருவருக்கும் வந்த செய்தியைக் கேட்கும் நபர்கள் பிரமை பிடித்தவர்கள்போல் ஆகி விடுகிறார்கள். செய்தியை நம்ப மறுக்கிறார்கள். விசுவாசிகள் தேவனுடைய ராஜ்யத்தையும், நித்திய ஜீவன் குறித்த நம்பிக்கையையும் பற்றிய தேவனின் வாக்குத்தத்தங்களை இனி நம்பமாட்டார்கள் என்பதில்லை.

உளத்தூண்டல்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தனியார்களுக்கு உடல்ரீதியாக வடிகால்கள் தேவை. நாம் மனுஷராக இருக்கிறோம். மனுஷீக உணர்ச்சிகளும், உள எழுச்சிகள் அல்லது உளத் தூண்டல்களும் அனுபவித்து வருகிறோம். உள்ததூண்டல் என்பது “ஒரு சிக்கலானதும் பொதுவாக வலுவான அகத்திண்மையுள்ளதுமான பிரதிகிரியை ஆகும்.'' அந்த அழுத்தங்களுள் காலங்களைக் கடந்து செல்வோர் தங்கள் உள எழுச்சி அல்லது தூண்டல்களை வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளுடன் கூட இருந்து, தங்கள் உணர்ச்சிகளைப் பற்றிப் பேசவேண்டும். தேவைப்பட்டால் அழவும் வேண்டும். (உள எழுச்சியையும் உணர்ச்சி நெருக்கடியையும் வெளியேற்றுதல்). இயேசு உள எழுச்சியைக் காட்டினார். யோவான் 11:35ல் “இயேசு கண்ணீர் விட்டார்” என்று கூறப்படவில்லையா? லூக்கா 19:41ல் இயேசு எருசலேமுக்கு வந்தபோது “நகரத்தைப் பார்த்து, அற்காகக் கண்ணீர் விட்டழுதார்.” இயேசுவானவர் தாம் அழுதது மட்டுமல்ல நாம் இந்த உலகில் அழுவோம் என்றும் கூறினார். “இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள். இனி நகைப்பீர்கள்” (லூக்கா 6:21). ரோமர் 12:15ல் பவுல், ‘‘சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள், அழுகிறவர்களுடையே அழுங்கள்” என்று கூறினார்.

ஒரு செவிலியராக, நான் குடும்பங்களிலுள்ள ஒருவர் மரணத்துக்கேதுவான நோய்வாய்ப்பட்டிருக்கும் போது அவர்களோடு வேலை செய்திருக்கிறேன். அவர்களின் மனத்துயரம் அவர்களின் வாழ்க்கையைப் பல வழிகளில் பாதிக்கிறது. அல்லது அந்த சூழ்நிலையில், உடல் நலம் பேணும் தொழிலோர் செய்வதென்ன? அவர்கள் அந்த நபரைப் பேச, அழ, திட்ட, தங்களுக்கோ பிறருக்கோ ஊறு விளைவிக்காமல் தங்கள் உள எழுச்சியை எந்த வகையில் வெளியிடத் தேவைப்படுகிறதோ அப்படி வெளியிட இடங்கொடுக்கிறார்கள். சில நேரங்களில் குடும்பங்களோடு சேர்ந்து நானும் அழுதிருக்கிறேன். சகோதர சகோதரிகளுக்காக நாமும் அப்படிச் செய்ய வேண்டாமா? நாம் கிறிஸ்துவைப் போல நடந்துகொள்ள வேண்டுமல்லவா? கிறிஸ்துவைப் போல இருக்கவேண்டுமல்லவா?

இயேசு மனதுருகினார் என்று சுவிசேஷ நூல்களை எழுதியோர் கூறுகிறார்கள். இயேசு குஷ்டரோகியைச் சுகமாக்கின சம்பவத்தை மாற்கு சொல்லும் போது இப்படி எழுதுகிறார் : “இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு : எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்” (மாற்கு 1:41) மத்தேயு 14:14ல் “இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேல் மனதுருகி, அவர்களில் வியாதிஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்” என வாசிக்கிறோம்.



மனதுருக்கத்தின் விளக்கம் : ஒருவருக்கொருவர் வேதனையைப் பகிர்ந்து கொள்ளும் ஆழமானதொரு உணர்ச்சியோடு உதவி அல்லது ஆதரவு அளிக்க அல்லது இரக்கம் காட்ட மனதைச் சாய்த்தல் “அப்போஸ்தலனாகிய பேதுருவும்” 1.பேதுரு 3:8ல் ‘‘மேலும் நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருங்கள்.” என எழுதுகிறார். சகரியா 7:9ல் “சேனைகளில் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீங்கள் உண்மையாய் நியாந்தீர்த்து, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும் செய்யுங்கள்” என வாசிக்கிறோம்.

கர்த்தருக்குள் சகோதர சகோதரிகளாக நாம் எங்ஙனம் இரக்கத்தையும் மனஉருக்கத்தையும் காண்பிக்கிறோம்? ஒருவருக்கொருவராக அவர்களோடிருந்து, சொல்லப்படுவதைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். அவர்களை நியாயந்தீர்க்காமல் அல்லது ஒரு ஆவிரிவுரையாளராக இல்லாமல் அமர்ந்திருக்கவேண்டும். சரியான நேரம் வரும்போது, தேவைப்பட்டோருக்கு ஆறுதல் அளிக்க சரியான வார்த்தைகள் உனக்கு அருளப்படும். சிலசமயம், நாம் எதுவுமே சொல்லத் தேவையிருக்காது, பேசாமல் அங்கே இருந்து கொண்டு கட்டித் தழுவி, அந்த நபர் சாய்ந்து கொள்ளவும் அழுது தீர்க்கவும் தோள் கொடுக்கவேண்டும். கனிவான வார்த்தைகளுள்ள வாழ்த்து அட்டைகளை சகோதரர்களுக்கு அனுப்புவதன் மூலம், நாம் அவர்களை நினைக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளச் செய்யலாம். ஒரு தடவை அல்ல, அடிக்கடி அப்படி அனுப்பலாம். உன்னிடம் சொல்லப்படுதைக் கேட்க நேரம் எடுத்துக்கொள்.

அதிக நோயுள்ள சகோதர சகோதரிகளுக்குத் தன் அன்பு, மன உருக்கம் இரக்கம் காட்டப்படும் என்பதல்ல. அவர்களை கவனிப்பவர்கள் - அவர்கள் வாழ்க்கைத் துணை பிள்ளைகள், பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி என யாராயிருந்தாலும் அவர்களுக்கும் அன்பு, மனஉருக்கம் இரக்கம் காட்டப்படவேண்டும். மற்றவர்கள் அநேகர் பல்வேறு விதமான சோதனைகள் உபத்திரவங்களினூடாகக் கடந்து வந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கும் வேலை போய்விடுகிறது. அல்லது வாழ்க்கை துணைக்கு வேலை போய்விடுகிறது. அதைப் பற்றி யோசியுங்கள். கைதூக்கிவிட ஆள் தேவைப்படும் நிலையிலுள்ளோர் நம் மத்தியில் உண்டு. தூரத்திலிருந்து ஒரு புன்னகை அல்லது ஒரு மறை கட்டித் தழுவுதல். அப்போஸ்தலர் 20:35ல் பவுல் இவ்விதம் கூறுகிறான் : “இப்படிப் பிரயாசப்பட்டு, கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தாராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டும்” (1. தெசலோனிக்கேயர் 5:14ல் “மேலும் சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறது என்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடியசாந்தமாயிருங்கள்” என எழுதுகிறார். ‘‘மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” (லூக்கா 6:31).

**- மேரி பிலேலோ**